



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 352 | 14.06.2026 | SUNDAY | VAIKASI : 31 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 352 | 14.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | வைகாசி : 31 | விலை : ரூ.5/-


# விமானப் படையை மேலும் வலுவாக்கும்
# "மகளிர் சக்தியின் பங்கேற்பு"

ஹைதராபாத்: ஜூன்.14-

தேசிய பாதுகாப்பு அகாடமியின் முதல் தொகுதி (first batch) பெண்கள் உட்பட 231 விமானப் பயிற்சி மாணவர்கள் விமானப் படையில் இன்று அதிகாரிகளாகப் பதவியேற்றனர். நிகழ்ச்சியில் உரையாற்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மகளிர் சக்தியின் பங்கேற்பு விமானப் படையை மேலும் வலிமையானதாக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.



தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தின், துண்டிகலில் உள்ள விமானப்படை அகாடமியில் பட்டம் பெற்றதைத் தொடர்ந்து, தேசிய பாதுகாப்பு அகாடமியின் முதல் தொகுதி பெண்கள் உட்பட மொத்தம் 231 விமானப் பயிற்சி மாணவர்கள் (194 ஆண்கள், 37 பெண்கள்) விமானப்படையில் இன்று அதிகாரிகளாகப் பதவியேற்றனர். பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 217வது பயிற்சிப் பிரிவின் ஒருங்கிணைந்த பட்டமளிப்பு அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் இந்திய கடற்படையைச் சேர்ந்த ஒன்பது அதிகாரிகளுக்கும், இந்திய கடலோரக் காவல்படையைச் சேர்ந்த 3 அதிகாரிகளுக்கும், வியட்நாம் சோசலிச குடியரசைச் சேர்ந்த 2 அதிகாரிகளுக்கும் விருது வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், "விமானப் படை தேசத்திற்கு கேடயமாகவும் வாளாகவும் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. புதிய சவால்கள் குறித்து அதிகாரிகள் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். சூழ்நிலைக்கேற்ப தங்கள் நடவடிக்கைகளை மாற்றியமைக்க வேண்டும்.

நவீன போரில், எதிரியோ அல்லது பயன்படுத்தப்படும் ஆயுதமோ பெரும்பாலும் கண்ணுக்குத் தெரிவதில்லை. ரேடார்கள், செயற்கைக்கோள்கள், ட்ரோன்கள், சென்சார்கள், ரோபோடிக்ஸ் போன்ற அமைப்புகள், போரிடும் தரப்பினரையோ அல்லது அவர்களின் இயந்திரங்களையோ கண்டறிவதை சாத்தியமற்றதாக்குகின்றன. நிச்சயமற்ற தன்மைகளையும் எதிர்பாராத சவால்களையும் எதிர்கொள்ள பயிற்சித் திட்டங்களும் பயிற்சிகளும் நமது வீரர்களை நன்கு தயார்படுத்தியுள்ளன.

நமது வீரர்கள், எதிர்காலப் போர் முறைகளையும் உத்திகளையும் புரிந்துகொண்டு, அவற்றுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொண்டு, அவற்றை ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும். பெண் அதிகாரிகளுக்குச் சிறப்பு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மகளிர் சக்தியின் அதிகரித்து வரும் பங்களிப்பு விமானப்படையை மேலும் வலுப்படுத்தி, அதனை மேலும் வலிமையானதாக மாற்றும்" என்று தெரிவித்தார்.



## விரைவில் முழுவீச்சில் வைகை அணையை தூர்வாரும் பணி: அமைச்சர் நிர்மல்குமார்

ஆண்டிபட்டி, ஜூன்.14-

இரண்டு மாதத்துக்குள் வைகை அணையை தூர்வாரும் பணி முழுவீச்சில் தொடங்கும் என்று ஆய்வுக்குப் பின் அமைச்சர் சிடிஆர். நிர்மல்குமார் தெரிவித்தார்.

போதுமான மழை இல்லாததால் கடந்த சில மாதங்களாக வைகை அணையின் நீர் மட்டம் குறைந்து கொண்டே வந்தது. மேலும் பாசன நீர், குடிநீருக்காக நீர் தொடர்ந்து திறக்கப்பட்டதால் கடந்த மாதம் 20 அடியாக சரிந்தது. ஏற்கெனவே நீருக்குள் 15 அடிக்கும் மேல் வண்டல் மண்படிவு உள்ள நிலையில் உண்மையான நீர்மட்டம் 5 அடிக்கும் கீழ் சென்றது. இதனால் குடிநீர் திட்டங்கள் முழுமையாக செயலிழந்தன. இதுவரை நீரில் மூழ்கி இருந்த வண்டல்மண் படிமங்கள் வெளியில் தெரிய தொடங்கின.

அணை வறண்டது ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தினாலும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அணைப்பகுதியை எளிமையான முறையில் தூர்வாரிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே விவசாயிகள், சங்க பிரதிநிதிகள், பொது மக்கள் உள்ளிட்ட பலரும் அணையை தூர்வார தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இதனைத் தொடர்ந்து இன்று (ஜூன் 13) தேனி மாவட்டத்துக்கு ஆய்வுக்கு வந்த எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சிடிஆர்.நிர்மல்குமார் அணைப் பகுதியை ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: அணையில் சுமார் 15 அடி வரை தேங்கி யுள்ள வண்டல் மண்ணை அகற்றி, தூர்வாரும் பணிகளை மேற்கொள் வதற்கான ஆய்வு அறிக்கைகள் தயாரிக் கப்பட்டு வருகின்றன. தூர்வாரும் பணி 3 கட்டங்களாக கொள்ள ஏறத்தாழ 9ஆண்டுகள் ஆகும். இது தொடர்பாக மத்திய அரசின் சுற்றுச்சூழல் அனுமதி பெற இரண்டு நாட்களுக்கு முன்பே தமிழக அரசு சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன், இன்னும் இரண்டு மாதங்களுக்குள் வைகை அணையை தூர்வாரும் பணி முழுவீச்சில் நடைபெறும்.

மேலும், விவசாயிகள் தங்கள் தேவைகளுக்காக வண்டல் மண்ணை இலவசமாக எடுத்துக் கொள்ள முழு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ஆனால் வணிக ரீதியாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ கடத்த முயன்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல் ஆண்டிபட்டி புறவழிச்சாலை திட்டமும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 6 நாட்கள் வெளிநாட்டு பயணம்; ஜி7 மாநாட்டில் பங்கேற்க பிரான்ஸ் புறப்பட்டார் மோடி

புதுடில்லி: ஜூன்.14-

டில்லியில் இருந்து நேற்று (ஜூன் 13) பிரதமர் மோடி 6 நாட்கள் வெளிநாட்டு பயணமாக பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியாவிற்கு புறப்பட்டு சென்றார்.



பிரதமர் நரேந்திர மோடி 6 நாட்கள் அரசுமுறை பயணமாக ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஸ்லோவேகியா நாட்டுக்கு இன்று புறப்பட்டு சென்றார். இந்தப் பயணத்தின்போது 52வது ஜி7 மாநாட்டில் பங்கேற்கிறார். இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

அடுத்த சில நாட்களில், இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் மற்றும் இந்தியப் புலம்பெயர்ந்தோருடனான கலந்துரையாடல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நான் பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியாவிற்கு புறப்பட்டுள்ளேன்.

இந்தப் பயணம் நைஸ் நகரில் நடைபெறும் நிகழ்ச்சிகளுடன் தொடங்கும். குறிப்பாக, 'பாரத் இன்னோவேட்ஸ்' நிகழ்ச்சியில் அதிபர் மேக்ரான் கலந்துகொள்வார். இந்தியாவும் பிரான்சும் 'இந்தியாபிரான்ஸ் புத்தாக்க ஆண்டை'க் கொண்டாடுவதால், 'பாரத் இன்னோவேட்ஸ்' நிகழ்வானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

நைஸ் நகரில், அதிபர் மேக்ரானுடன் நான் பேச்சுவார்த்தை நடத்துவேன். ஜூன் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில், ஜி7 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக நான் எவியான் நகரில் இருப்பேன். அங்கு நான் பல்வேறு உலகத் தலைவர்களுடன் கலந்துரையாடுவேன். நான் வரும் 18ம் தேதி பாரிஸில் இருப்பேன்.

அங்கு, அதிபர் மேக்ரானுடன் இணைந்து விவாடெக் 2026 மாநாட்டில் கலந்துகொள்வேன். தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான ஐரோப்பாவின் முக்கியக் கூட்டங்களில் ஒன்றில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதே நாளில், பிரான்சில் உள்ள இந்திய சமூகத்தினருடன் கலந்துரையாடுவதையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ஜூன் 18ம் தேதி இரவு மீண்டும் டில்லிக்கு பிரதமர் மோடி திரும்புகிறார்.

## "விற்பனை குறையவில்லை எனில் 'கிரீன் மேஜிக்' பால் எங்கே?"
## அரசுக்கு அண்ணாமலை கேள்வி

சென்னை: ஜூன்.14-

"தவெக அரசு தற்போது வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில், கிரீன் மேஜிக் பால் விற்பனை குறைக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால், ஏன் ஆவின் மையங்களில் முன்பு போல அது கிடைப்பதில்லை?" என அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பதிவில், "சென்னையில், மொத்தம் விற்பனையாகும் சுமார் 14.75 லட்சம் லிட்டர் ஆவின் பாலில் கிட்டத்தட்ட 50%, சுமார் 7.5 லட்சம் லிட்டர் பால் விற்பனை, பச்சை நிற கிரீன் மேஜிக் பாக்கெட் பால் ஆகும்.

இந்த நிலையில், கிரீன் மேஜிக் பால் விற்பனை குறைக்கப்பட்டு, குறைந்த அளவே தற்போது விற்பனைக்கு வழங்கப்படுகிறது என்ற செய்தி அறிந்து, அது குறித்து விசாரித்ததில், ஏற்கெனவே சுமார் 50% விற்பனை குறைக்கப் பட்டிருப்பதாகவும், படிப்படியாக, கிரீன் மேஜிக் வகை பால் விற்பனை நிறுத்தப்படவுள்ளதாகவும், ஆவின் விற்பனை மையங்களிலேயே கூறுகின்றனர்.

ஆனால், தவெக அரசு தற்போது வெளியிட்டிருக்கும் செய்தி வெளியீட்டில், கிரீன் மேஜிக் பால் விற்பனை குறைக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால், ஏன் ஆவின் மையங்களில் முன்பு போல அது கிடைப்பதில்லை? கிரீன் மேஜிக் வகை பால் விற்பனை கணிசமாகக் குறைந்துள்ளதை பொதுமக்களே அறிவார்கள். யாரை ஏமாற்ற இந்த பொய்யான விளக்கத்தை அளிக்கிறது தவெக அரசு?

கடந்த 2023ஆம் ஆண்டு திமுக ஆட்சியிலும் இதேபோல, 4.5% கொழுப்புச் சத்துள்ள பச்சை நிற பாக்கெட் பால் விற்பனையை நிறுத்தி விட்டு, 3.5% கொழுப்பு சத்துள்ள ஊதா நிற பாக்கெட் பால் விற்பனை செய்ய முடிவெடுத்த போது, எதிர்க்கட்சிகள் எதிர்ப்பால் அந்த முடிவை திமுக அரசு கைவிட்டது. ஆனால், தற்போதைய தவெக அரசும் அதே முடிவை மக்களிடம் திணிப்பது, வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

கிரீன் மேஜிக் வகை பால் விற்பனை குறைப்புக்கு, நிதி இழப்பைக் காரணமாகக் கூறுகிறார்கள். நிதி இழப்பைச் சரி செய்ய, பால் உற்பத்தியையும், பால் மற்றும் பால் பொருள்கள் விற்பனையையும் அதிகரித்து, அதன்மூலம் நிதி இழப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமே தவிர, ஏழை எளிய மக்கள் அதிகம் பயன்படுத்தும் பால் வகை விற்பனையை நிறுத்தக் கூடாது.

உடனடியாக, மீண்டும் போதுமான அளவு, பச்சை நிற கிரீன் மேஜிக் பாக்கெட் பால் விற்பனையைக் கொண்டு வர வேண்டும் என்றும், பால் உற்பத்தி, கொள்முதல் மற்றும் விற்பனை உள்ளிட்டவற்றை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் தவெக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'சேலத்தில் 50+ பெண்களுக்கு பாலியல் வன்கொடுமை... சிபிசிஐடி விசாரணை தேவை' மார்க்சிஸ்ட்

சென்னை: ஜூன்.14-

"சேலத்தில் 50க்கும் மேற்பட்ட பெண்களை ஆபாசமாக வீடியோ எடுத்தும், அதை வைத்தே மிரட்டி பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டது குறித்தும் சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட்டு குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்ய வேண்டும்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'சேலம் மாநகரப் பகுதியில் 50க்கும் மேற்பட்ட பெண்களை மணிகண்டன் என்பவர் ஆபாசமாக வீடியோ எடுத்தும், அதை வைத்தே மிரட்டி பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதுடன் அப்பெண்களை பாலியல் வணிகத்தில் உள்ளாக்கியுள்ள சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கொடுஞ்செயலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட மணிகண்டனை போலீசார் கைது செய்துள்ளனர். இருப்பினும் மணிகண்டன் பெண்களை மிரட்டி பாலியல் வணிகத்தில் தள்ளியுள்ளதால் இதன் பின்புலமாக மேலும் பலர் இருக்கக் கூடும் என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, இவ்வழக்கை உடனடியாக சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட்டு இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ள குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் கைது செய்து உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டுமெனவும், பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவருக்கும் உரிய பாதுகாப்பை வழங்குவதோடு, அவர்கள் குறித்த தகவல்களை கசியவிடாமல் பாதுகாக்கவும், இன்னும் வேறு யாராவது பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை கண்டறிய வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழக அரசையும், காவல்துறையையும் வலியுறுத்துகிறது.

குற்றம்சாட்டப்பட்ட நபர் தவெக கட்சியை சேர்ந்தவர் என்று ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளது. அது உண்மையாக இருப்பின் அவரை கட்சியிலிருந்து நீக்குவதுடன் எவ்வித அரசியல் அழுத்தமுமின்றி விசாரணை நேர்மையாக நடைபெறுவதை தமிழக அரசு உறுதி செய்திட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்துகிறது' எனத் தெரிவித்துள்ளார்.



■ திருநெல்வேலிக்கு வருகை தந்த தமிழக நிதி அமைச்சரும் திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான மரிய வில்சனை திருநெல்வேலி தெற்கு மாவட்ட தமிழக வெற்றி கழகச் செயலாளர் ராஜகோபால் முன்னிலையில் திசையன்விளை பேரூர் கழக செயலாளர் கில்லிராஜா மற்றும் தமிழக வெற்றிக்கழக பிரமுகர் தில்லை முத்துக்குமார் மற்றும் பலர் வரவேற்றபோது...




# பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பாராட்டு விழா

தூத்துக்குடி, ஜூன்.14-

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே அரசூர் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியில் 2025 26 கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற அதிக மதிப்பெண் எடுத்த மாணவ மாணவிகளுக்கு மற்றும் தேசிய திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கும் பாராட்டி கேடயம் வழங்கும் விழா அரசூர் பஞ்சாயத்து தச்சன் விலையில் சமூக ஆர்வலர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இதில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவிய மாணவர்களுக்கு மரக்கன்று கொடுத்து கேடயமும் வழங்கப்பட்டது .அதுபோல் தேசிய திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு கேடயம் வழங்கி சால்வை அணிவித்து மரக்கன்றுகள் வழங்கப்பட்டது இதில் அந்தப் பகுதி பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு மாணவ மாணவிகளை வாழ்த்தினார்கள்... மேலும் இந்த நிகழ்ச்சியில் கிராம அதிகாரி ஆனந்த், சுப்பையா, மற்றும் ஊர் பொதுமக்கள் கணபதி, நடராஜன், ஆனையன் ஆனகுட்டி மணி மாயாண்டி கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் டவுன்ஹாலில் உள்ள மாநகராட்சி S.R.C ரங்கசாமி மாநாட்டு அரங்கத்தில் திடக்கழிவு மேலாண்மை குறித்து குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை குறித்து வார்டு வாரியான ஆய்வு கூட்டம் நடைபெற்று பொதுமக்களிடம் இருந்து பெரும் புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன் துணை ஆணையாளர் திரு.சுந்தரராஜன், மாநகர நல அலுவலர் மரு.மோகன், உதவி ஆணையாளர்கள் திரு.கணேஷ்குமார் (மண்டலம்1), திரு.பார்த்தசாரதி (மண்டலம்3), திரு.குமரன் (மண்டலம்4),மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# 'கிரீன் மேஜிக்' பால் விநியோகம் குறைக்கப்படவில்லை: ஆவின் விளக்கம்

சென்னை, ஜூன்.14–

ஆவின் க்ரீன் மேஜிக் பால் விநியோகம் குறைக்கப்படவோ நிறுத்தப்படவோ இல்லை என்றும், வழக்கம்போல் விநியோகம் செய்யப்படுவதாகவும் ஆவின் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆவின் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆவின் நிறுவனத்தின் பச்சை நிற பால் வகையான 'Green Magic' பாலின் விநியோகம் நிறுத்தப்பட்டதாகவோ அல்லது கணிசமாகக் குறைக்கப்பட்டதாகவோ சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. ஆவின் நிறுவனம் தனது அனைத்து பால் வகைகளையும் Green Magic பால் உட்பட தொடர்ந்து வழக்கம்போல் விநியோகம் செய்து வருகிறது என்பதை இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது. எந்தவொரு பால் வகையின் விநியோகமும் நிறுத்தப்படவோ அல்லது கணிசமாகக் குறைக்கப்படவோ இல்லை. நுகர்வோர்களின் தேவைகளுக்கு ஏற்ப பால் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்களும் நுகர்வோரும் இதுபோன்ற தவறான செய்திகளை நம்பி குழப்பமடைய வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஆவின் Green Magic பால் வழக்கம்போல எந்தவித தடங்கலும் இன்றி தொடர்ந்து விநியோகம் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆவின் பால் உற்பத்தியை முடக்குவது, மக்கள் ஆரோக்கியத்தின் மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல். அதிக உற்பத்தி செலவின் காரணமாக, பெரும்பாலான நடுத்தர மக்கள் பயன்படுத்தும் ஆவினின் 'கிரீன் மேஜிக்' பால் பாக்கெட்டுகளின் உற்பத்தி படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும், கூடிய விரைவில் அப்பால் பாக்கெட்டுகள் முழுமையாக நிறுத்தப்பட உள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. இதற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்து வந்தனர். இந்நிலையில், ஆவின் நிர்வாகம் இந்த விளக்கத்தை அளித்துள்ளது.



# சென்னையில் தொடங்கிய மாம்பழ திருவிழா: பல்வேறு மாநிலங்களின் 25க்கும் மேற்பட்ட வகைகள் விற்பனை

சென்னை, ஜூன்.14–

'இந்தியாவின் மாம்பழ பாரம்பரியத்தைக் கொண்டாடுவோம்' என்ற தலைப்பில் நாட்டின் பல்வேறு மாநில தோட்டங்களிலிருந்த பறிக்கப்பட்ட சுவை மிகுந்த மாம்பழங்களை சென்னை மக்களுக்கு நேரடியாக வழங்கும் விதமாக, நபார்டு வங்கி மற்றும் அதன் துணை நிறுவனமான நப்கிசான் ஃபைனான்ஸ் சார்பில் 'மாம்பழ திருவிழா 2026' சென்னை ராயப்பேட்டையில் உள்ள எக்ஸ்பிரஸ் அவென்யூ வணிக வளாகத்தில் நேற்று தொடங்கியது.

இதில் தமிழகம், ஆந்திரப் பிரதேசம், கேரளா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களின் பிரசித்தி பெற்ற அல்போன்சா, மல்கோவா, இமாம்பசந்த், பங்கனபள்ளி, செந்தூரா, ருமானி, மல்லிகா, நீலம், ரஸ்வாலி, பெங்களூரா உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட மாம்பழ வகைகள் 16 அரங்குகளில் குவிக்கப்பட்டுள்ளன. ஜூன் 14 வரை 3 நாட்களுக்கு காலை 10 மணி முதல் இரவு 11 மணிவரை கண்காட்சி நடைபெறுகிறது.

மாம்பழ திருவிழாவைத் தொடங்கி வைத்து பார்வையிட்ட வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆர்.வினோத், நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.2.25 கோடிக்கான கடனுதவிகளை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது: தமிழகத்தில் 1.45 லட்சம் ஹெக்டேர் பரப்பில் மாம்பழம் சாகுபடி செய்யப்பட்டு, 9.49 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதையொட்டி தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் புதிதாக 'மா' நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.30 ஆயிரம் வரையும், குறைந்த இடைவெளியில் அதிக மாங்கன்றுகளை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.48 ஆயிரம் வரையும், பழைய மாந்தோட்டத்தை புதுப்பிக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் வரையும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து 'மா' ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பல்வேறு துறைகளுடன் இணைந்து கிருஷ்ணகிரி, தருமபுரி, திண்டுக்கல், தேனி, வேலூர், திருவள்ளூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் 'மா' சிறப்புக் குழுக்கள் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது 162 டன்னாக உள்ள மாம்பழ ஏற்றுமதியை அடுத்த 5 ஆண்டுகளில் 1000 டன்னாகவும், பதப்படுத்தப்பட்ட 'மா' பொருட்களின் ஏற்றுமதியை 75 ஆயிரம் டன்னில் இருந்து 1.46 லட்சம் டன்னாகவும் உயர்த்த திட்டமிட்டுள்ளோம் என்று அவர் பேசினார்.

இந்நிகழ்வில் தோட்டக்கலைத் துறை இயக்குநர் ஜெ.விஜயா ராணி, நபார்டு வங்கியின் பொது மேலாளர் எஸ்.எஸ்.வசீகரன், தலைமைப் பொது மேலாளர் ஹெச்.மனோஜ், இந்திய ரிசர்வ் வங்கியின் பொது மேலாளர் சுப்பிரமணியன், நப்கிசான் மூத்த துணைத் தலைவர் மோகன் கார்த்திக், துணை தலைமை நிதி அதிகாரி ஆர்.கே.சுரேஷ் ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




► புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அலுவலர்கள், பணியாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

# கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி காவிரி நீரை தவெக அரசு பெற்றுத்தர வேண்டும்: அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.14–

மேட்டூர் அணை திறக்கப்படாததால் விவசாயிகள் கவலை அடைந்திருப்பதாகவும், கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி காவிரி நீரை தவெக அரசு பெற்றுத்தர வேண்டும் எனவும் தமிழக அரசுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை:



அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி: மேட்டூர் அணை திறக்கப்படாததால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளனர்.

இவ்விவகாரத்தில், மேட்டூர் அணையில் இருந்து நீரை திறப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

பாமக நிறுவனர் ராமதாஸ்: மேட்டூர் அணை திறக்கப்படாத தால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்கான நிலத்தயாரிப்பு பணிகள் முடங்கியுள்ளன. எனவே தமிழக அரசு உடனடியாக கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி காவிரி நீரை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். அமமுக பொதுச்செ யலாளர் டிடிவி தினகரன்: மின்வெட்டால் நெற்பயிர்களுக்கு உரிய நேரத்தில் போதிய நீரை பாய்ச்ச முடியாமல் பயிர்கள் கருகி வருகின்றன. இந்நிலையில் தவெக அரசு அறிவித்துள்ள 18 மணி நேர தடையில்லா மின்சார வழங்கல் அறிவிப்பை எவ்வாறு நம்புவது?

திமுக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே. எஸ்.விஜயன்:

தமிழகத்தில் ஆண்டு தோறும் ஜூன் 12 மேட்டூர் அணைதிறக்கப்படும் நடைமுறையைக் கூட கடைபிடிக்கமுடியாமல் தோற்றுப்போயிருக்கும் இந்தஅனுபவமில்லாத அரசு, வெற்று அறிவிப்பாக வெளியிட்டிருக்கும் குறுவை தொகுப்பு மற்றும் மும்முனை மின்சார அறிவிப்பு என்பது அடுப்பை பற்றவைக்காமலேயே சமைப்பதுபோல் உள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி: மேட்டூர் அணையை திறக்கப்படாத நிலையில், விவசாயிகளுக்கு தமிழக அரசு குறுவை சிறப்பு திட்ட நிதி ஒதுக்கீட்டை அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது. அதேநேரம் கைநடவு மற்றும் இதர சாகுபடி பணிகளுக்குமான தொகையாக மானியத்தை கூடுதலாக வழங்குவதுடன், காவிரி நீர் கிடைக்காததால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி மூலம் கிடைக்கும் முழு வருமானத்தை இழந்துள்ள விவசாயிகளுக்கு நிவாரண தொகையையும் அரசு அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித் துள்ளனர்.

மேலும், பாமக தலைவர் அன்புமணி, தமாகா தலைவர் ஜி.கே. வாசன், தவாக தலைவர் தி.வேல்முருகன், ஐஜேகே தலைவர் ரவிபச்சமுத்து ஆகியோரும் காவிரி நீரை பெற்றுத் தர தமிழக அரசை வலியுறுத்தி உள்ளனர்.



# ஓய்வுபெற்ற மருத்துவர்களுக்கு பணி நீட்டிப்பு கூடாது: தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் வேண்டுகோள்

சென்னை, ஜூன்.14–

ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கக்கூடாது என்று தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் மருத்துவர் பி.பாலகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: திமுக, அதிமுக ஆட்சியில் ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்களில் தங்களுக்கு சாதகமானவர்களுக்கு பணி நீட்டிப்பை வழங்கினார்கள். இதனால், சீனியர் மருத்துவர்களுக்கு முறையான பதவி உயர்வு கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதைக் கண்டித்து பல்வேறு போராட்டங்களை நடத்தினோம். ஓய்வு பெற்றவர்கள் உயர் பொறுப்புகளில் வரும்போது முறைகேடுகள் நடைபெற வாய்ப்புள்ளது. அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதேநேரம், அரசு மருத்துவர்கள் அரசுக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, கடந்த ஆட்சியாளர்கள் செய்த தவறை, தவெக அரசு செய்யாது என்று நம்புகிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பயிர்க்கடன் தள்ளுபடி கோரி அதிமுக சார்பில் விழுப்புரத்தில் 16ல் ஆர்ப்பாட்டம்: பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஜூன்.14–

தவெக தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய வலியுறுத்தி அதிமுக சார்பில் விழுப்புரத்தில் ஜூன் 19ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கை: தேர்தல் அறிக்கையில் கூறியபடி, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்வது தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்றவும், தமிழகத்தில் நிலவி வரும் அறிவிக்கப்படாத மின்வெட்டை போர்க்கால அடிப்படையில் சரிசெய்யவும் தவெக அரசை வலியுறுத்தி, விழுப்புரம் மாவட்ட அதிமுக சார்பில் ஜூன் 19ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும். இதன்படி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள விழுப்புரம் நகராட்சித் திடலில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட செயலாளர் இரா.பசுபதி தலைமை தாங்குகிறார்.



► சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டை மாரியம்மன் கோவில் ஊராட்சி எஸ்.கே நகரில் சிமெண்ட் கான்கிரீட் சாலையின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



► மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப், தலைமையில் அருவிக்கரையில் கம்பிவடம் ஊர்தி (ரோப் கார்) வசதி அமைப்பது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# தமிழக பாஜகவுக்கு புதிய தலைவர்? பிரதமரின் ஒப்புதலுக்கு காத்திருப்பதாக தகவல்



சென்னை, ஜூன்.14–

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மாற்றப்பட உள்ளதாகவும், பிரதமரின் ஒப்புதல் கிடைத்தவுடன் புதிய தலைவர் அறிவிக்கப்படுவார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில், பாஜக, ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றிபெற்று படு தோல்வியைச் சந்தித்தது. இந்தத் தோல்விக்கு மாநிலத் தலைமையின் தவறான அணுகுமுறையே காரணம் என, கட்சிக்குள்ளேயே கடும் விமர்சனங்கள் எழுந்தன.

அண்ணாமலை விலகல் இந்தச்சூழலில், பாஜகவின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கட்சியிலிருந்து விலகி, 'வீ த லீடர்ஸ்' என்ற புதிய இயக்கத்தைத் தொடங்கினார்.

தேர்தல் தோல்வி மற்றும் அண்ணாமலையின் புதிய இயக்கம் தந்த நெருக்கடியைத் தொடர்ந்து, தமிழக பாஜகவை முழுமையாக மறுசீரமைக்க தேசியத் தலைமை தீவிரமாக இறங்கியுள்ளது.

அந்த வகையில், தற்போதைய மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் விரைவில் மாற்றப்பட்டு, அவருக்கு மத்திய அமைச்சரவையில் இடம் வழங்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

அதன்படி, புதிய மாநிலத் தலைவரை நியமிப்பதற்கான ஆலோசனைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. குறிப்பாக மாநில பொதுச் செயலாளர் பேராசிரியர் ராம சீனிவாசன், மாநிலச் செயலாளர்கள் அஸ்வத்தாமன், வினோஜ் பி.செல்வம், தேசிய செயற்குழு உறுப்பினர் ஹெச்.ராஜா ஆகியோரின் பெயர்கள் பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பட்டியல் பிரதமர் மோடியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. பிரதமரின் ஒப்புதல் கிடைத்தவுடன், புதிய தலைவர் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என பாஜக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, தமிழக பாஜகவின் அடுத்தகட்ட அரசியல் பாதையை தீர்மானிக்கும் மையக்குழு கூட்டம், பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் தலைமையில் டெல்லியில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய அமைச்சர் எல்.முருகன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஆர்.சேகர், முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், மாநிலப் பொதுச் செயலாளர் ஏ.பி.முருகானந்தம் மற்றும் ஹெச்.ராஜா, தமிழிசை சவுந்தரராஜன், வானதி சீனிவாசன், கார்த்தியாயினி, பேராசிரியர் ராம சீனிவாசன் உள்ளிட்ட மையக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், சட்டப்பேரவை தேர்தல் தோல்விக்கான காரணங்கள், உட்கட்சி செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# சாதியை காரணம் காட்டி பள்ளிகளில் சாமி கயிறுகளை தடை செய்வதை அனுமதிக்க முடியாது: இந்து முன்னணி





சென்னை, ஜூன்.14–

'சாதி கயிறுகளை காரணம் காட்டி சாமி கயிறுகளை தடை செய்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது' என தெரிவித்துள்ள இந்து முன்னணி, 'சமூக நீதி என்ற பெயரில் கல்விக் கூடங்களில் மத அடையாளங்களை புறக்கணிக்கச் சொல்லும் அறிவிப்பை பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் திரும்பப் பெற வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கை: 'சாதி பிரிவினைகளை தடுக்கும் வகையில் பள்ளிக் கூடங்களில் மாணவர்கள் கயிறுகள் கட்டி வரக்கூடாது எனவும், எந்தவிதமான மத அடையாளங்களையும் அணிந்து வரக் கூடாது எனவும் அமைச்சர் ராஜ் மோகன் அறிவித்துள்ளார். சாதி மோதல்களை தடுக்கும் வகையில் ஓய்வு பெற்ற நீதிபதி சந்துருவின் பரிந்துரைகளை அமல்படுத்த ஆலோசனை நடந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதிபதி சந்துரு இடதுசாரி சிந்தனையாளர்; நாத்திக எண்ணம் கொண்டவர். திமுக ஆட்சியில் அவரது பரிந்துரைகளை திமுக அரசே நடைமுறைப் படுத்தாமல் அதனை புறக்கணித்தது. அந்த சமூகவிரோத கருத்துகளை புதிய அரசான தாங்கள் அமல்படுத்த நினைப்பது கண்டனத்திற்குரியது.

பள்ளிகளில் சாதி ரீதியாக பிரிவினை கூடாது என்பதில் எள்ளளவும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதற்காக மத அடையாளங்களை அணிந்து வரக்கூடாது என்பது ஏற்றுக்கொள்ள கூடியது இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் மதத்தை சுதந்திரமாக பின்பற்ற, அரசியல் சாசனம் உறுதி அளிக்கிறது. இதனை மறுப்பதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை.

பள்ளிக் கூடங்களில் இந்து மாணவர்கள் தங்கள் நெற்றியில் திலகம் வைத்து வருவார்கள். குலதெய்வங்களின் கயிறுகள், உள்ளூர் கோயிலில் காப்பு கட்டும் கயிறுகள் ஆகியவற்றை மாணவர்கள் அணிந்து வருவார்கள். இது ஆன்மிகத்தில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை குறித்த விஷயமாகும்.

கிராமப்புறங்களில் மட்டுமல்ல நகர்ப்புறங்களிலும் கூட இன்றளவும் உடம்பு சரி இல்லாமல் போனால் கோயிலுக்கு சென்று கயிறு கட்டும் பழக்கம் உள்ளது. இதனை தடுப்பது மாணவர்களின் மன உறுதியை சீர்குலைக்கும் செயலாகும்.

கயிறு கட்ட வர வேண்டாம் என சொல்லும் அரசு, முஸ்லிம் மாணவிகள் குல்லா, மாணவிகள் புர்கா அணிந்து வருவது மற்றும் சிலுவை அணிந்து வரக்கூடாது என சிறுபான்மை மாணவர்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்குமா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

கடந்த ஆட்சியில் ஏற்கெனவே பல பள்ளிகளில் சபரிமலை ஐயப்பனுக்கு மாலை போட்டு விரதம் இருந்து வரும் மாணவர்கள் துண்டு அணிந்து வரக்கூடாது என கூறியதற்கு பிரச்சினை எழுந்ததையும் இதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து கைவிட்டதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

சிறுபான்மையினர் நடத்தும் பல கல்விக் கூடங்களில் இந்து மாணவர்கள் குங்குமம் இடுவது கூட தடை செய்யப்படுகிறது. மாணவிகள் பூ வைத்து வந்தால் அதை பிடுங்கி எறிவது என கட்டுப்பாடுகள் பிரச்சினைகளை ஏற்படுத்தின. இதை எல்லாம் இந்த அரசாங்கம் தட்டிக் கேட்குமா என்பதே பலரின் கேள்வியாக உள்ளது.

பள்ளிக் கூடங்களில் மத அடையாளங்களோடு வரக்கூடாது என சொல்கிறீர்கள். ஆனால் கிறிஸ்துவ மற்றும் முஸ்லிம் கல்விக் கூடங்கள் அவர்களின் மத வழிபாட்டு தலமாகத் தானே காட்சி அளிக்கின்றன. அதனை நீக்க உத்தரவு போடும் தைரியம் இந்த அரசுக்கு இருக்கிறதா?

சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் பல இந்து குழந்தைகள் படிக்கின்றனர். அங்கு அவர்களை தினமும் பைபிள் வாசகங்களை பாட வைக்கின்றனர். இது மதத்தை கட்டாயமாக திணிப்பது தானே. எனவே, கிறிஸ்தவ பள்ளியை பொது கல்வி பட்டியலில் இருந்து நீக்கி கிறிஸ்தவ பள்ளியாக அறிவிக்க அமைச்சர் தயாரா?

சாதி கயிறுகளை காரணம் காட்டி சாமி கயிறுகளை தடை செய்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. சட்டசபையில் கூட சமத்துவம், சமூக நீதி என்ற சித்தாந்தத்தை முன் வைக்கும் வகையில் முஸ்லிம் கிறிஸ்தவ சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் மத அடையாளங்களை கைவிட வலியுறுத்துங்கள்.

புதிதாக பதவியேற்றுள்ள இந்த அரசாங்கம் கல்வித் துறையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி, மாணவர்களுக்கான திறமைகளை வளர்க்கும் வண்ணம் செயல்பட வேண்டும். அதை விட்டுவிட்டு கடந்த திமுக ஆட்சி செயல்படுத்திய மக்கள் விரோத செயல் திட்டங்களை திமுகவின் நிழல் அரசாக தாங்கள் செயல்படுத்த நினைப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இது எல்லோருக்குமான ஆட்சி என்பதை உறுதி செய்யும் விதமாக மத அடையாள எங்களை அணிந்து கொண்டு பள்ளிகளுக்கு வரக் கூடாது என்ற அறிவிப்பை கல்வித் துறை அமைச்சர் திரும்பப் பெற வேண்டும் என்று இந்து முன்னணி சார்பாக கேட்டுக்கொள்கிறோம்' என்று காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் வலியுறுத்தியுள்ளார்.

# நிபா வைரஸ் பாதிப்பு எதிரொலி: 3 நாட்கள் காய்ச்சல், தலைவலி, வாந்தி இருந்தால் மருத்துவரை அணுக வேண்டும்: பொது சுகாதார துறை வேண்டுகோள்

சென்னை, ஜூன்.14–

நிபா வைரஸ் பாதிப்பு எதிரொலியாக 3 நாட்கள் காய்ச்சல், தலைவலி, வாந்தி இருந்தால் மருத்துவரை அணுக வேண்டும் என்று பொது சுகாதார துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தில் ஒருவருக்கு நிபா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது. அவருக்கு, மருத்துவ குழுவினர் கண்காணிப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதேபோல, அவருடன் தொடர்புடைய 3 பேர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த கோரி மாவட்ட சுகாதார துறை அதிகாரிகளுக்கு பொது சுகாதார துறை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு, பொது சுகாதார துறை அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: நிபா வைரஸ், விலங்குகள் மூலம் பரவும் ஒரு நோய் தொற்று. எனவே எவருக்கேனும் தொடர்ச்சியாக 3 நாட்கள் காய்ச்சல், தலைவலி, வாந்தி உள்ளிட்டவை இருந்தால் உடனடியாக டாக்டரை அணுக வேண்டும். அறிகுறிகளுடன் வருபவர்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளிக்க வேண்டும். நிபா வைரஸ் பாதிப்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர்களை, மருத்துவனையில் தனி அறையில் வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும். எல்லையோர மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

# ஆட்டோ கட்டணத்தை தமிழக அரசு உயர்த்த வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.14–

பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் ஆட்டோக்களுக்கான கட்டணம் கடைசியாக 2013ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.

அப்போது நிர்ணயிக்கப்பட்ட கட்டணப்படி ஆரம்ப 1.8 கிலோமீட்டருக்கு ரூ.25, அதன்பின் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.12 என நிர்ணயிக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாக இந்த கட்டணத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

ஆனால், இந்த காலக்கட்டத்தில் பெட்ரோல், டீசல் மற்றும் சிஎன்ஜி எரிபொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. 2013ம் ஆண்டில் லிட்டருக்கு ரூ.65 முதல் ரூ.70 வரை இருந்த பெட்ரோல் விலை தற்போது ரூ.100ஐ தாண்டி உயர்ந்துள்ளது. அதேபோல் சிஎன்ஜி. எரிபொருள் விலையும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

ஆரம்ப கட்டணத்தை ரூ.40 ஆகவும், ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.18 ஆகவும் நிர்ணயிப்பது குறித்து அரசு பரிசீலிக்கலாம்.

மேலும், ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்குஒருமுறை எரிபொருள் விலை உயர்வின் அடிப்படையில் கட்டணத்தை தானாக மறுஆய்வு செய்யும் நடைமுறையைஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தியாகதுருகம் அருகே மாரியம்மன் கோயில் திருத்தேர் கவிழ்ந்து விபத்து





தியாகதுருகம், ஜூன்.14–

தியாகதுருகம் அருகே அம்மன் கோயில் தேரோட்டம் நடந்தபோது திடீரென தேர் கவிழ்ந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் அடுத்த பல்லகச்சேரி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் நேற்று திருத்தேர் திருவிழா நடைபெற்றது. இதையொட்டி காலை முதல் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. மாலையில் வடம்பிடித்து தேர் இழுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். சாலையில் தேர் வலம் வந்து கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக மழை மற்றும் சூறைக்காற்று அடித்தது. அப்போது தேரின் சக்கரம் சாலையின் அருகில் உள்ள சிறிய பள்ளம் மீது ஏறி இறங்கியது. இதில் நிலைதடுமாறிய தேர் திடீரென்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அப்போது தேர் கவிழ்ந்த இடத்தில் யாரும் இல்லாததால் அதிர்ஷ்டவசமாக பக்தர்கள் உயிர் தப்பினர். இதுகுறித்து தகவல் அறிந்து வந்த தியாகதுருகம் தீயணைப்பு நிலைய அலுவலர் (பொறுப்பு) கார்த்திகேயன் தலைமையிலான வீரர்கள் தேரை பத்திரமாக மீட்டனர். பின்பு தேரில் இருந்த மாரியம்மன் சிலையை பத்திரமாக கோயிலுக்குள் கொண்டு சென்றனர். திடீரென்று தேர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தேர் கவிழ்ந்ததால் பக்தர்கள் கவலையடைந்தனர்.

# சீசன் முடிவடைந்தும் பருத்தி விலை குறைவால் கவலையில் விவசாயிகள்

ராமநாதபுரம், ஜூன்.14–

ராமநாதபுரம் மாவட்டத்தில் கோடை விவசாயமாக செய்யப்பட்ட பருத்தி விவசாய பருவம் முடிந்தது. இந்தாண்டு விளைச்சல் குறைவால் விலையும் குறைந்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல், மிளகாய்க்கு அடுத்தப்படியாக பருத்தி விவசாயம் செய்யப்படுகிறது.

மழை காலத்தில் மானாவாரி பயிராகவும், கோடையில் இறவை பாசனத்தில் (போர்வெல், கிணறு) பருத்தி பயிரிடப்படுகிறது. மாவட்டத்தில் ராமநாதபுரம், பரமக்குடி, நயினார்கோயில், கமுதி, முதுகுளத்தூர் மற்றும் கடலாடி வட்டங்களில் சுமார் 25ஆயிரம் ஏக்கரில் பருத்தி விவசாயம் நடந்து வருகிறது.

இந்நிலையில் கடந்தாண்டு பருவக்காலம் மற்றும் கோடைக் காலத்தில் கடலாடி பகுதியில் மேலச் செல்வனூர், கீழச்செல்வனூர், சிக்கல், இதம்பாடல், பி.கீரந்தை, மேலச்சிறுபோது, கீழச்சிறுபோது, கொகொண்டான், சடையனேரி, பூக்குளம், இளஞ்செம்பூர், சவேரியார்பட்டினம், சவேரியார் சமுத்திரம், மாரந்தை உள்ளிட்ட பகுதிகள்.

முதுகுளத்தூர் பகுதியில் கீழத்தூவல், கீழகன்னிச்சேரி, சவேரியார்பட்டணம், கேளல், கொமெலூர், தட்டனேந்தல், பெருங்கரணை, மீசல், மகிண்டி, காக்கூர், புளியங்குடி, கருமல் போன்ற பகுதிகள், உத்தரகோசமங்கை, களரி பகுதிகள், அபிராமம் மணிப்புரம் உள்ளிட்ட பகுதிகள், கமுதி அருகே பேரையூர் நெறிச்சிப்பட்டி, கோவிலாங்குளம் பகுதிகள் என மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்ட கிராம பகுதிகளில் 25 ஆயிரம் ஏக்கரில் பருத்தி விவசாயம் செய்யப்பட்டது.

மழை காலத்தில் மிளகாயுடன் ஊடு பயிரகவும், ஒரு சில பகுதிகளில் முழுமையாகவும், அதன் தொடர்ச்சியாக பிப்ரவரி மாதம் கோடை விவசாயமாக இரண்டாம் முறையாக பிரதான பயிராகவும் 135 நாட்களில் மகசூலை தரக்கூடிய எம்.சி.யு 7 ரக பருத்தி பரவலான பகுதியில் பயிரிடப்பட்டது.

இந்நிலையில் இரண்டு காலத்திலும் பறிக்கப்பட்ட பருத்தி கொட்டையிலிருந்து பஞ்சை எடுத்து விவசாயிகள் விற்று வருகின்றனர். ஆனால் இந்தாண்டு போதிய கோடை மழை இல்லாதது. பூச்சி தாக்குதல் உள்ளிட்ட காரணங்களால் விளைச்சல் குறைந்தது. இதனால் நல்ல பருத்தி கிலோ ரூ. 55க்கும், இரண்டாம் ரக பருத்தி ரூ.40 முதல் 45 வரை விலை போவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேலக்கொடுமலூர் விவசாயிகள் கூறும்போது, கடந்தாண்டு மாவட்டத்தின் பிரதான பருவமழையான வடகிழக்கு பருவமழை வரும் செப்டம்பர், அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காலம் கடந்து மழை பெய்தது.

இதுபோன்று கோடையிலும் போதிய மழை பெய்யவில்லை. இதனால் போர்வெல் சவறு தண்ணீரை பயன்படுத்தி விளைவிக்கப்பட்டதால் விளைச்சல் குறைந்தது. இந்தாண்டு பூச்சி தாக்குதலும் அதிகமாக இருந்தது. இதனால் மகசூல் குறைந்த நிலையில் தற்போது பருத்தி கொட்டையில் இருந்து வெடித்த பஞ்சு எடுக்கப்பட்டு வந்தது.

பருத்தி பயிரிடுதல், உரம் உள்ளிட்ட பராமரிப்பு பணிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வரை செலவு செய்யப்பட்டது. தொடர்ந்து பஞ்சு எடுத்தல் பணிக்கு நாள் ஒன்றிற்கு 5 முதல் 10 பெண்கள் வருவர், அவர்களுக்கு கூலியாக ரூ.350 வரை வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் மழை காலத்தில் அறுவடை செய்யப்பட்ட பருத்தி ஏப்ரல், மே மாதங்களில் வரை ஒரு கிலோ பருத்தி ரூ.112 வரை விற்பனை ஆனது. கடந்தாண்டு ரூ.72க்கு வாங்கப்பட்டது. ஆனால் தற்போது நல்ல பருத்தி ரூ.55வரையிலும், இரண்டாம் ரக பருத்தி ரூ.40 முதல் 45 வரையிலும் விலை போகிறது என்றார்.



# புதிய எம்எல்ஏக்களுக்கு 2 நாள் புத்தாக்க பயிற்சி: சட்டப்பேரவைத் தலைவர் தகவல்

சென்னை, ஜூன்.14–

தமிழக எம்எல்ஏக்களுக்கு 2 நாள் புத்தாக்கப் பயிற்சி சென்னையில் வழங்கப்பட உள்ளது. இதில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் கூறினார்.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில், தவெக அதிக இடங்களில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்துள்ளது. தற்போதைய 229 எம்எல்ஏக்களில் சுமார் 145 பேர் (60%) புதுமுகங்களாக இருக்கின்றனர். இதில் தவெகவில் மட்டும் 101 பேர் முதல்முறையாக எம்எல்ஏ ஆகியுள்ளனர். இதற்கிடையே சட்டப்பேரவையின் முதல் கூட்டம் ஆளுநர் உரையுடன் வரும் ஜூன் 18ம் தேதி தொடங்க வுள்ளது. அதற்கு முன்னதாக எம்எல்ஏக்களுக்கு சட்டப்பேரவை நடவடிக்கைகள் குறித்து 2 நாள் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இதுகுறித்து சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் செய்தியாளர்களிடம் கூறியது: ஒவ்வொரு முறையும் தேர்தல் முடிந்து சட்டப்பேரவை கூடுவதற்கு முன்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து எம்எல்ஏக்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி வழங்குவது வழக்கம். அதன்படி இந்த முறையும் 17வது சட்டப்பேரவைக்கு தேர்வான அனைத்து எம்எல்ஏக்களுக்கும் இருநாள் பயிற்சி முகாம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் ஜூன் 16, 17ம் தேதிகளில் காலை 10 முதல் மாலை 5.30 மணி வரை நடத்தப்பட உள்ளது. முதல்வர் தொடங்கி வைக்கிறார். இதில் பேரவை விதிகளுக்குட்பட்டு உறுப்பினர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை பற்றிய முழு விவரங்களும் அவர்களுக்கு பயிற்சியில் விவரிக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நிலுவை பணிகளை விரைந்து முடித்து விழுப்புரம் நகரை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க வேண்டும்



விழுப்புரம், ஜூன்.14–

விழுப்புரம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை, பாதாளசாக்கடை திட்டப்பணிகள், சுகாதாரப்பணிகள் குறித்து அதிகாரிகளுடன் லட்சுமணன் எம்எல்ஏ தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடந்தது.

சேர்மன் தமிழ்ச்செல்வி பிரபு, நகராட்சி ஆணையர் ஷியாமளா, பொறியாளர் புவனேஸ்வரி, நகர்நலஅலுவலர் ஸ்ரீபிரியா மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். ஆய்வுக்கூட்டத்திற்கு பிறகு லட்சுமணன் எம்எல்ஏ செய்தியாளர்களிடம் கூறியதாவது: விழுப்புரம் நகராட்சியில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

முதல்கட்டமாக தேர்தலுக்கு முன்பு 29 கி.மீ தூரம் சாலை வசதிகள் கிட்டதட்ட 235 சாலைகள் டெண்டர் விடப்பட்டு பணிகள் தொடங்கி 130 சாலைகள் நிறைவடைந்துவிட்டன. 105 சாலைகள் 12கிலோ மீட்டர் அளவில் நிலுவையில் உள்ளன. மிகவிரைவில் அந்த சாலைகள் முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

பாதாளசாக்கடை நிரம்பி வழியும் பகுதிகளில் வரும் புகார்கள் குறித்து ஒப்பந்ததாரரை அழைத்து சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை பிரச்னைகளை முற்றிலும் தீர்வுகாணும் வகையில் புதிய இயந்திரங்கள் வாடகைக்கு எடுத்து சீரமைப்புபணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. விழுப்புரத்தை சுத்தமான, சுகாதாரமான நகரமாக மாற்றிட வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த ஆய்வுக்கூட்டத்தை நடத்தி பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாககூறினார்.

நகரமன்ற உறுப்பினர்கள் மணவாளன், புருஷோத்தமன், சாந்தராஜ், ஜனனிதங்கம், புல்லட்மணி மற்றும் திமுக தொண்டரணி அமைப்பாளர் கபாலி, நகர நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ தமிழக அரசால் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் விதமாக துவங்கப்பட்ட சிங்கப்பெண் அதிரடிப்படை (Singappen Special Force) தென்காசி மாவட்டத்திலும் துவங்கப்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S.அசோக் குமார் அவர்களின் உத்தரவின் பேரில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், பொதுவெளியில் பெண்கள் எந்த ஒரு அச்சுறுத்தலும் இல்லாமல் இருக்கும் இடமாகவும், அவசரகாலங்களில் உடனடி உதவி வழங்கவும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இந்த சிறப்பு அதிரடிப்படை தீவிரப் பணியில் ஈடுபட்டு வருகிறது. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர்கள், கோவில், பேருந்து நிலையம் போன்ற பகுதிகளில் கூடும் பெண்கள் ஆகியோருக்கு பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது.




# தென்காசி சிவந்தி நகர் கலைஞர் அறிவாலயத்தில், 25 இளைஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்

தென்காசி, ஜுன்14-

தென்காசி சிவந்தி நகர் கலைஞர் அறிவாலயத்தில், தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் வே. ஜெயபாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் 2026 தென்காசி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக போட்டி யிட்ட ஜி.எம். சங்கர் (எ) கோமதி சங்கர் அவர்கள் மற்றும் கே.இ. ராகுல் அவர்கள் ஏற்பாட்டில் 25 இளைஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் புதிதாக கழகத்தில் இணைந்த இளைஞர்களை மாவட்டச் செயலாளர் வே. ஜெயபாலன் அவர்கள் வரவேற்று வாழ்த்தினார். மேலும், கழகத்தின் கொள்கைகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் தீவிரமாக செயல்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து, கழகத்தில் இணைந்த அனைவருக்கும் கருப்புசிவப்பு வேஷ்டி அணிவித்து கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவில்பட்டி தலைமை அஞ்சலகத்தில் பொதுமக்கள் தயாரிப்பு பொருட்களை வெளிநாட்டிற்கு அனுப்ப ஏற்றுமதி மையம் திறப்பு

கோவில்பட்டி, ஜூன்.14-

India Post Dak Sewa-Jan Sews டாக் கர் நிர்யத் கேந்திரா (Dak Ghar Niryat Kendra - DNK) சிறு வணிகர்கள், கைவினைஞர்கள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஏற்றுமதியை எளிதாக்க அறிமுகப்படுத்திய ஒரு திட்டமாகும்.

இதன் மூலம் சிறு வணிகர்கள் ஏற்றுமதியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை அனுப்பத் தேவையான ஆவணங்கள், சுங்க அனுமதி (Customs clearance) போன்ற அனைத்தையும் காகிதமில்லாமல் (paperless) ஆன்லைனில் மேற்க்கொள்ளலாம். 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' (ODOP) திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் உள்ளூர் தயாரிப்புகளை எளிதாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.




இந்த சேவையை பெற இந்திய அஞ்சல் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்திற்கு சென்று அதற்கான DNK போர்ட்டலில் பதிவு செய்ய வேண்டும்.பதிவு, செய்வதற்கு இறக்குமதி ஏற்றுமதி குறியீடு (IEC), GSTIN மற்றும் கிஞ் குறியீடு போன்ற விவரங்கள் தேவைப்படும்.

இந்த இணையதளத்தில் பதிவு செய்த வாடிக்கையாளர்களின் ஏற்றுமதி பொருட்களை அனுப்ப, தனி கவுண்டர் கோவில்பட்டி தலைமை அஞ்சலகத்தில் (12.06.2026) காலை 10 மணிக்கு திறக்கப்பட்டது. கோவில்பட்டி கோட்ட அஞ்சலக கண்காணிப்பாளர் செ. சுரேஷ் குமார் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் கோவில்பட்டியை சார்ந்த, தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் தூத்துக்குடி மண்டல தலைவர் வி. ராதாகிருஷ்ணன் ரிப்பன் வெட்டி இந்த மையத்தை திறந்து வைத்தார். நிகழ்வில் கலந்து கொண்ட கோவில்பட்டி சுற்று வட்டார வணிகர்கள் குத்து விளக்கேற்றி விழாவை சிறப்பித்தனர்.

பின்னர் வாடிக்கையாளர்களுக்கு ஒரு சிறப்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, டிஜிட்டல் முறையில் கணிணி மூலமாக எடுத்துரைக்கப்பட்டது. இந்த நிகழ்வில், அஞ்சல் உதவி கண்காணிப்பாளர்கள்/ ஆய்வாளர்கள், கோவில்பட்டி தலைமை அஞ்சலக போஸ்ட் மாஸ்டர், அஞ்சல் அலுவலர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த சேவை தொடர்பான மேலும் விபரங்களுக்கு, பொதுமக்கள் 04632 221013 என்ற தொலை பேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் எனவும் அஞ்சலக செய்தித் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Superintendent of Post Offices □□□□□□□□□□ □□□□, □□□□□□□□□□628501 Kovilpatti Division, Kovilpatti628501



# திருநெல்வேலிக்கு வருகை தந்த தமிழக நிதித்துறை அமைச்சர்க்கு காங்கிரஸ் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது

திருநெல்வேலி, ஜூன்.14-

திருநெல்வேலிக்கு வருகை தந்த தமிழக நிதித்துறை அமைச்சர் மரிய வில்சனை திருநெல்வேலி பயணிகள் விடுதியில் திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் எம் .பி. தலைமையில் ராதாபுரம் தொகுதி கிராம காங்கிரஸ் கமிட்டி மறு சீரமைப்பு அமைப்பாளர் விவேக் எம். முருகன் பொன்னாடை அணிவித்து வரவேற்றனர். அருகில் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட துணைத் தலைவர் விஜய பெருமாள் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட செயலாளர் ஐசக் மற்றும் சங்கனாங்குளம் வடிவேல் நெல்லை சேவியர் தமிழக வெற்றிக் கழக நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் ராஜகோபால் மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



# அ.இ.அ.தி.மு.க. உடுமலை நகர கழக வார்டு நிர்வாகிகள் ஆலோசணைக்கூட்டம்

திருப்பூர், ஜூன்.14-

அ.இ.அ.தி.மு.க கழக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் ஆணைகிணங்க திருப்பூர் புறநகர் மாவட்ட கழக செயலாளர் திருப்பூர் சிவசாமி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் வழிகாட்டுதல் படி உடுமலை நகர கழக அ.தி.மு.க அவைத்தலைவர் சாமி என்ற சிவராஜ் அவர்கள் தலைமையில் 13.14,15 ஆகிய வார்டு கிளை கழக செயலாளர்கள் பொன்ராஜ், நாகூர் மீரான், நாகராஜ் முன்னிலை வகிக்க பொன்ராஜ் அவர்கள் இல்லத்தில் ஆலோசனை கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் நியமனம் சம்பந்தமாக ஆலோசனை கூட்டத்தில் சார்பணி மாவட்ட செயலாளர் எஸ்.எம்.நாகராஜ் யு.கே.பி.என். ராதாகிருஷ்ணன் நகர கழக பொருளாளர் விஸ்வநாதன், மாவட்ட பிரதிநிதி மளிகை செல்வராஜ் நகர கழக

இணை செயலாளர் சந்திரிகா எக்ஸ்.எம்.சி, நகர் மன்ற உறுப்பினர் சௌந்தரராஜன், 21வது வார்டு செயலாளர் ராஜசேகர், 3வது வார்டு செயலாளர் காமாட்சிகுமார், 2வது செயலாளர் ரங்கராஜ் அம்மாபேரவைவ இணைசெயலளார் பேப்பர் குணா மற்றும் சந்தை வேலாயுதம், சரவணன், மேஷன் செந்தில், மினிடோர் சுப்பிரமணி, ராஜகோபால், சாந்தி, சங்கீதா, 1வது வார்டு பொறுப்பாளர்கள் சுபாஷினி, சதீஸ், பூபதி, 13.14,15 வார்டு கிளை கழக பொறுப்பாளர்கள் ஸ்ரீ ஹரிகிருஷ்ணன் 11வது வார்டு மருத்துகடை மனேகர் வெள்ளிங்கிரி முகமதுயாசிப் அப்பாஸ் ஜோதிமணி தாகீர்பாஷா, அபுபாக்கர், லி.மி.சி.சின்னச்சாமி, டாஸ்மர்க் : நாராயணன், பிரியதர்ஷினி ஆகிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். 15வது வார்டு பொறுப்பாளர் நாகராஜ் நன்றியுரை வழங்கினார்.

# தமிழக அமைச்சரவையில் இடம் பெற வேண்டும் என்பதற்காக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு கொடுக்கவில்லை புளியங்குடி திருமண விழாவில் தேசிய தலைவர் பேராசிரியர் கே எம் காதர் மொகிதீன் விளக்கம்

புளியங்குடி ஜூன்.14-

தமிழக அமைச்சரவையில் இடம் பெற வேண்டும் என்பதற்காக முஸ்லிம் லீக் தமிழக வெற்றி கழகத்திற்கு ஆதரவு கொடுக்கவில்லை என்று புளியங்குடி திருமண விழாவில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர்மொகிதீன் விளக்கம் அளித்து பேசினார்.

புளியங்குடி நகர இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முன்னாள் நகரத் தலைவர் வாழையடி மர்ஹூம் எம் திவான் ஹசன் பேரனும் நகர துணைத் தலைவர் டி எச் செய்யது அப்துல் ரகுமான் தங்கள் மகனுமாகிய எஸ். திவான்ஹசன் என்ற சுஹைல் மணமகனுக்கும் ஏ ஜம்ரத் அலி மகள் மர்ஷியா மனமகளுக்கும் மணவிழா புளியங்குடி மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசல் வளாகத்தில் 11.6.2026 அன்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே எம் காதர் மொகிதீன் தலைமையில் நடந்தது மாநில துணைத்தலைவர் வி. எஸ்.ஆர் முகமது இஸ்மாயில் மாவட்ட செயலாளர் ஏ செய்யது பட்டாணி வர்த்தக அணி மாநில தலைவர் எஸ்





செய்யது சுலைமான் முஸ்லிம் மாணவர் பேரவை தேசிய துணைத் தலைவர் எம் முஹம்மது அல் அமீன் வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் ஜாகிர் அப்பாஸ் புளியங்குடி நகர தலைவர் இமை அப்துல் ரகுமான் நகரச் செயலாளர் எம் ஷேக் காதர் மைதீன் எம்சி பொருளாளர் கொ.இ முகமது அப்துல் காதர் மேலப்பள்ளிவாசல் ஜமாத் கமிட்டி தலைவர் முகைதீன் அப்துல் காதர் ஜமாலியா பள்ளிவாசல் தலைவர் ஏ காஜா முஹைதீன் கீழப்பள்ளி வாசல் தலைவர் இ. ரிசவப்பா டி எச் முகமது பாவா டி எச் முகமது அலி ஜின்னா டி எச் யாக்கத்தலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேல பள்ளிவாசல் தலைமை இமாம் ஜே கலீல் ரகுமான் ஆலிம் கிராஅத் ஓதினார் சிங்கப்பூர் எம் முகமது யூசுப் ஆலிம் நிக்காஹ் குத்பா ஓதினார் எம் முஹம்மது அபூபக்கர் சித்திக் ஹசனி ஆலிம் துஆ ஓதினார். மாவட்ட முதன்மை துணைத் தலைவர் ஏ அப்துல் வஹாப் அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மாநில பொதுச் செயலாளர் கே ஏ எம் முகமது அபூபக்கர் மாநில துணைத்தலைவரும் தமிழக வக்பு வாரிய தலைவருமான கே நவாஸ் கனி எம்பி ஆகியோர் மணமக்களை வாழ்த்தி பேசினார்கள் விழாவில் விவசாய அணி மாநில செயலாளர் எம் முகமது அலி கடையநல்லூர் நகரத் தலைவர் கே எம் செய்யது மசூது வடகரை முத்து முகமது எம் சி கே எம் முகமது இலியாஸ் மடத்துப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் வி ஏ எஸ் செய்யது இப்ராஹிம் முஸ்லீம் யூத் லீக் மாவட்ட தலைவர் எஸ் செய்யது அபுதாகிர் மாவட்ட செயலாளர் ஆடிட்டர் மைதீன் பிச்சை,எஸ்டியூ மாவட்ட தலைவர் பொறியாளர் முகமது இஸ்மாயில் மாவட்ட துணைத் தலைவர்கள் தி கலீல் ரகுமான் தென்காசி முகமது முஸ்தபா மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ் ஏ ஹைதர் அலி பி பி அயூப்புகான் வழக்கறிஞர்கள் அணி மாவட்ட தலைவர் முகமது ஜாவித் மருத்துவர் அணி மாவட்ட தலைவர் டாக்டர் மீரா முகைதீன் வாசுதேவநல்லூர் நகர தலைவர் மிலிட்டரி சாகுல் ஹமீது நகரச் செயலாளர் ஆர் செய்யது த.வெ.க மாநில பேச்சாளர் நெல்லை புகாரி நகர நிர்வாகிகள் பத்திரம் பாதுஷா டெய்லர் காஜா மைதீன் எம் காஜா மைதீன் எஸ் முகமது உசேன் முன்னாள் நகர நிர்வாகிகள் பி என் எம் காதர் மைதீன் ராயல் சுலைமான் எம் ஹபிபுல்லா தென்காசி நகரப் பொருளாளர் முகமது யூசுப் முன்னாள் நகர மன்ற துணைத்தலைவர் அலாவுதீன் மதிமுக நகரச் செயலாளர் ஜாகிர் உசேன் அரசன் காதர் சோப்பு யூசுப் பிஸ்மி முகைதீன் கடையநல்லூர் கே எம் ரஹ்மத்துல்லா மூத்த பத்திரிகையாளர் சாகுல் கமீது உட்பட ஏராளமான பேர் நேரில் வந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000